★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: கார்த்திகை 7உ வியாழன் (22—11—56) ★ ★ வெளியூர்: கார்த்திகை 8உ வெள்ளி (23—11—56) [இதழ் 141

'தகுதி'பற்றி மீண்டும் பேச்சு!

★

பத்தாவது படித்தபின் தொடர்ந்து கல்வி பெறுவதற்கு, அரசாங்கம் சலுகை தரவேண்டுமானால், அதற்கு மாணவன் ஏழை என்ற காரணம் மட்டும் போதாதாம்! அவன், சலுகை பெறத் 'தகுதி'யும் பெற்றிருக்க வேண்டுமாம்!

இப்படி ஒரு பதில் கூறியிருக்கிறார், மக்கள் சபையில் டெல்லி கல்வி இலாகா உதவி மந்திரி!

ஒரு கட்சி சர்வாதிகார நோக்கம்

காங்கிரஸ் செயலாளர் அம்பலமாக்குகிறார்

இந்தியாவில் எதிர்க்கட்சி தேவை இல்லையாம்!

அது வெறும் பகட்டாம்!

சென்னை, நவ. 22—

எதிர்க்கட்சிகள் தேவை இல்லையாம் இந்தியாவிற்கு!

காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஸ்ரீமன் நாராயணன் இந்த அற்புதமான கருத்தை வெளியிட்டிருப்பதன் நோக்கம், மக்களால் உணரப்பட வேண்டிய ஒன்றாகும்.

"பாராளுமன்ற ஜனநாயகத்திற்கு எதிர்க்கட்சி பல வழிகளில் பயனளிப்பதாக இருந்தாலும் மேல்நாடுகளில் உள்ளது போன்ற நிலையான கட்சி முறைகள் அனைத்தையும் இந்தியாவில் பின்பற்றத் தேவை இல்லை.

"அதிக வளர்ச்சி பெறாத இந்தியாவில், எதிர்க்கட்சி வேண்டும் என்பதற்காகவே ஒரு எதிர்க்கட்சி இருக்கத் தேவை இல்லை; அப்படி எதிர்க்கட்சி இருப்பது வெறும் பகட்டு தான்,"

என்று பத்திரிகையாளரிடம் கூறியுள்ளாராம், இந்த காங்கிரஸ் செயலாளர்.

'நாசர் ஒரு நன்றிகெட்ட சர்வாதிகாரி'

'டான்' இதழ் குற்றச்சாட்டு

கராச்சி, நவ. 20—

"பாகிஸ்தான் பிரதமரை வரவேற்று, மத்தியக் கிழக்கு நிலைகள் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்த எகிப்திய தலைவர் நாசர் மறுத்தது, பாக் சர்க்காருக்கும் மக்களுக்கும் திட்டமிட்டுச் செய்த அவமானமாகும்; நாசர் ஒரு சர்வாதிகாரியாக விளங்குகிறார்.

"அவரது செயல், நன்றி மறந்த ஒன்றாகும். ஆங்கிலோ-பிரெஞ்சு ஏகாதிபத்தியங்கள், எகிப்து மீது ஆக்கிரமிப்புத் தொடுத்தபோது அதை எதிர்த்து, பாகிஸ்தான் ஆற்றிவந்த பணிகளை அவர் மறந்துவிட்டார். அவர் பாகிஸ்தான் மீது கொண்டுள்ள அர்த்தமற்ற வீணமான பகை, குணப்படுத்த முடியாத வியாதிபோலாகி விட்டது"

என்று கராச்சியிலிருந்து வெளிவரும் 'டான்' என்ற இதழ் எழுதியுள்ளது.

முன் சொன்னதெல்லாம் கதையா?

உணவுத் துறையில் சுயநிறைவு எப்போது?

கணக்கிட்டுக் கூற முடியாதென்கிறார் அமைச்சர்

புதுடில்லி, நவ. 21—

"உணவுத் தானியங்களைப் பொறுத்து, எப்போது—எந்த அளவுக்கு சுயநிறைவு எய்த முடியும் என்பதைக் கணக்கிடுவது மிகவும் சிரமமான தாகும்"

என்று, மாநிலங்கள் சபையில் உணவு அமைச்சர் கூறியதுடன் மேலும் சொன்னார்:—

"உற்பத்தி உயர்வுடன் மக்கள் தொகையும் பெருகி வருகிறது; 'போஷாக்கு'த் தரமும் உயருகிறது; இதனால் மக்களிடை—குறிப்பாக பாட்டாளிகளிடையிலும், கீழ்-நடுத்தர வகுப்பு மக்களிடையேயும் உணவுத் தானியங்களுக்கு மேலும் தேவை அதிகரிக்கிறது. உற்பத்தி உயர்ந்தாலுங்கூட, பெருகிவரும் இந்தத் தேவையைச் சமாளிக்க அயல் நாடுகளிலிருந்து ஓரளவு இறக்குமதி செய்யத்தான் வேண்டியுள்ளது."

இந்துமத வெறியரின் சாதிப் பித்து

பசுபதிநாதனைக் காண்பதற்கு புத்த பிச்சுக்களுக்குத் தடை

காட்மண்டு கோவிலில் அக்கிரமம்; தாழ்த்தப்பட்டோர் நுழையக்கூடாதாம்

காட்மண்டுவில் உள்ள பசுபதிநாதர் கோவிலுக்குள் நுழையக்கூடாதென சுமார் 100 புத்த பிச்சுக்கள் தடுக்கப்பட்டனர் என்று செய்தி கிடைத்திருக்கிறது.

உலக புத்த காங்கிரசில் கலந்துகொள்ள பிரதிநிதிகளாக வந்துள்ள அந்த பிச்சுக்கள் பசுபதிநாதர் ஆலயத்தைப் பார்க்க விரும்பிச் சென்றபோது, 'நுழையக்கூடாது' என்று தடுக்கப்பட்டிருக்கின்றனர்.

இதற்குக் கூறப்பட்ட காரணம், தீண்டப்படாதவர்களும், தாழ்த்தப்பட்டவர்களும் இந்த ஆலயத்திற்குள் அனுமதிக்கப்படுவதில்லை என்பதாம்!

தாங்கள் தீண்டப்படாதவர்களோ தாழ்த்தப்பட்டவர்களோ அல்ல என்று, புத்த பிச்சுக்கள் வாதாடியும் கேட்க மறுத்து, கோவில் குருக்கள்மார், கதவுகளை இழுத்து மூடிவிட்டனராம்!

மூடிய கோவிற்கதவுகளைப் படம் பிடித்துக்கொண்டு, பிச்சுக்கள் ஏமாற்றத்துடன் திரும்பினராம்!

நியாயவிலைக் கடையில் அரிசி விநியோகம்

விற்பனையைக் கண்காணிக்க மேற்பார்வையாளர்கள் நியமனம்

சென்னை, நவ. 21—

நகரத்தில் 241 கடைகள் உட்பட மாநிலத்தில் மொத்தம் 1,643 நியாய விலைக் கடைகள், சர்க்கார் அரிசி விற்பதற்காகத் திறக்கப்பட்டிருக்கின்றன என்று சர்க்கார் கூறுகிறது.

இந்த நியாய விலைக் கடைகளில் திருட்டுத்தனம் நடைபெறாமல் தடுக்கவும், அரிசி விற்பனை குறித்துக் கண்காணிக்கவும், மத்திய உணவிலாகா அதிகாரி, நகரில் 10 மேற்பார்வையாளர்களை நியமித்துள்ளாராம்.

எதிர்க் கட்சியினர் வெளிநடப்பு

'இருமொழி பம்பாய் ஏற்பாடு மக்களின் விருப்பத்திற்கு விரோதமானது'

இருமொழி பம்பாய் மாநில ஏற்பாட்டினைக் கண்டிக்கும் வகையில், பம்பாய் சட்டசபையின் கூட்டுக் கூட்டத்தில் தற்காலிக கவர்னர் உரையாற்ற வந்தபோது, எதிர்க் கட்சியினர் வெளிநடப்புச் செய்திருக்கின்றனர்.

திணிப்பு

"மராட்டிய, குஜராத்தி மக்களின் தெளிவான விருப்பங்களுக்கு எதிராகத் திணிக்கப்பட்டது இந்த இரு மொழி பம்பாய் ஏற்பாடு"

என்று அவர்கள் கூறினர் என்றும் தெரியவருகிறது.

சூயஸ் கால்வாய்

சர்வதேச ஆதிக்கத்தின் கீழ் வைப்பதற்கு முயற்சி

பிரிட்டனின் 'நப்பாசை' ஒழியவில்லை?

லண்டன், நவ. 20—

சூயஸ் கால்வாயை சர்வ தேச ஆதிக்கத்தின்கீழ் வைப்பதை எல்லாவகையிலும் உறுதி செய்வதே பிரிட்டனின் கொள்கை என்பதை நிலைநாட்டுமாறு பிரிட்டன் மக்கள் சபையில் கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

இந்தக் கொள்கைதான் இனி மேலும் சர்க்காரின் உத்தேசமாக இருந்து வருமென்றும், இந்தக் கொள்கை எகிப்தின் காதில் விழும் என்பதிலும் தமக்குச் சந்தேகம் இல்லையென்றும் தற்காலிகப் பிரிட்டன் பிரதமர் பட்லர் பதிலளித்துள்ளாராம்.

தென்னாட்டில் தொழிற்கல்வி வளர்ச்சி

3 கல்லூரிகளும், 14 கல்வி நிலையங்களும் ஏற்படுத்த வேண்டும்

டாக்டர் ஏ. இலட்சுமணசாமி தலைமையில் உள்ள குழுவின் சிபாரிசுகள்

சென்னை, நவ. 21—

சென்னை மாநிலத்தில் 5 தொழிற் கல்விக்கூடங்களும், ஒரு எஞ்சினீயரிங் கல்லூரியும் நிறுவ வேண்டும் என்று, அகில இந்திய தொழிற் கல்விக் குழுவின் தென்மண்டலப் பிரிவினர் சிபாரிசு செய்துள்ளனராம்.

தென் மண்டலப் பிரிவுக் குழுவின் தலைவரான டாக்டர் இலட்சுமணசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற குழுவின் கூட்டத்தில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்றும் தெரிகிறது.

நெய்வேலியில் ஒன்று; அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஒன்று; ஏ. எம். முருகப்பா தாம நிறுவனத்தின் சார்பில் சென்னையில் ஒன்று; நாச்சிமுத்து 'டிரஸ்ட்' சார்பில பொள்ளாச்சியில் ஒன்று; சேலம் அல்லது வேறெங்காயினும் சர்க்கார் சார்பில் ஒன்று—ஆக ஐந்து தொழிற் கல்விக்கூடங்கள் நிறுவ வேண்டும் என்றும், எஞ்சினீயரிங் கல்லூரி மதுரையில்தல் அமைய வேண்டும் என்றும் குழு கூறியிருக்கிறது.

மற்ற மாநிலங்களில்

ஆந்திரப் பிரதேசத்தில் மூன்று; மைசூரில் இரண்டு; கேரளத்தில் நான்கு தொழிற் கல்விக்கூடங்களும், ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் தெலிங்கானா பகுதியில் மேலும் ஒரு எஞ்சினீயரிங் கல்லூரியும், கேரளத்தில் ஒரு எஞ்சினீயரிங் கல்லூரியும் அமைக்கப்பட வேண்டும் என்றும் குழு சிபாரிசு செய்துள்ளது.

இந்தியர் வீடுகளைத் தரைமட்டமாக்க சர்க்கார் உத்தரவு

தெ. ஆ. சர்க்காரின் நிறவெறித் தாண்டவம்

ஜோகன்ஸ்பர்க், நவ. 21—

ஜோகன்ஸ்பர்க்கிலுள்ள சோபியா எனும் நகரை, ஐரோப்பியர் வாழும் பகுதியாக மாற்றுவதற்கென, அந்நகரில் வாழ்ந்து வரும் இந்தியர்களுடைய வீடுகளையெல்லாம் இடித்துத்தள்ளி தரைமட்டமாக்கிவிடும்படி, தெ. ஆ. சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனராம்.

இந்த உத்தரவை நிறைவேற்றும் முதல் நடவடிக்கையாக, அங்கிருள்ள பல இந்தியத் தொழிலாளர் குடும்பங்களையெல்லாம், உடனே அங்கிருந்து விட்டு வெளியேறுமாறு கேட்டுக்கொண்டு வெளியேற்ற அறிவிப்பு விடுத்திருக்கின்றனராம் நிறவெறிகொண்ட அந்த சர்க்கார்!

வெளியேற்ற உத்தரவைக் கண்ட இந்தியர்களெல்லாம் இது சம்பந்தமாக வழிக்கறிஞர்களைக் கலந்து ஆலோசித்து வருவதாகவும், இந்தியர்களைப்போலவே, பல சீனக் கடை வியாபாரிகளும் தங்கள் தங்கள் கடைகளையும் வீடுகளையும் உடனடியாகக் காலி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர் என்றும் பத்திரிகைச் செய்திகள் மூலம் மேலும் தகவல்கள் கிடைத்திருக்கின்றன

மற்றுமோர் ஆக்கிரமிப்பா?

சிரியா எல்லையில் பிரிட்டிஷ் — பிரெஞ்சு — இஸ்ரேல் படைகள் குவிகின்றனவாம்

நியூயார்க், நவ. 21—

சிரியா மீது இஸ்ரேல் அருப்புகள் ஆக்கிரமிப்புச் செய்யத் தயாராக இருப்பதாக, ஐ. நா. சபையில் சிரியா பிரதிநிதி புகார் செய்திருக்கிறார் என்று கூறப்பட்டிருக்கிறது.

புதிதாக எழுந்துகொண்டிருக்கின்ற இந்த ஆக்கிரமிப்புப் பயமுறுத்தலை, ஐ. நா. சபை உடனடியாக விவாதிக்க வேண்டும் என்றும் அவர் கோரியிருக்கிறார்.

நம் நாடு

சென்னை 22—11—'56 வியாழன்

தந்தை பாதையில் மகள்!

மக்களாட்சி பெயர் கூறித்தான், காங்கிரசுக் கட்சியினர் இந்தியத் துணைக்கண்டத்தில் கோலோச்சி வருகின்றனர். இருந்தாலும், மக்கள் விருப்பத்தையும் நலன்களையும் மதித்து நடந்துவருவதுதான் மக்களாட்சி முறையின் மாண்பு என்பதை, காங்கிரசு ஆளவந்தார்கள் இதுவரை செயலாற்றினது கிடையாது.

மக்கள் கோரிக்கைகளை அலட்சியப்படுத்தி நடந்துகொள்வதிலும் தங்கள் போக்கை மக்கள் மீது வலுவில் திணிப்பதிலும், காங்கிரசு ஆளவந்தார்கள் புகழ்பெற்று இருப்பவர்கள் ஆவர். அத்தகு அரசியல் திருக்கூத்தை நன்கு ஆடத்தக்கவர்களில், அவர்களுடன் போட்டியிட்டு வெற்றி பெறக் கூடியவர்கள் இங்கு எவரும் இல்லை. அத்தகைய ஆற்றல் படைத்தவர்கள் இனியாவது பிறக்க முடியுமா என்றால் நிச்சயமாக முடியாது என்று தான் முடிவு கூறியாக வேண்டும்.

தேர்தல் காலங்களில் மக்களுக்குக் கொடுக்கும் வாக்குறுதிகளை மறந்து அதற்கு மாறாக வேண்டுமென்றே முரண்பட நடந்துகொள்வதிலும், காங்கிரசு ஆளவந்தார்களுக்கு இணையாக வேறு எவரையும் மனதினாலும் நினைக்க முடியாது. மக்களுக்கு நன்மை தரக்கூடியவை என்று எதெதைத் தங்கள் அதிகாரத்தின் பெயரால் திணிக்க முற்பட்டாலும், அவை ஒவ்வொன்றும் நியாயமானது, நேர்மையானது, மக்களால் மகிழ்ந்து இரு கையேந்தி வரவேற்கத்தக்கது, அதுவே சிறந்த மக்களாட்சி—என்ற சர்வாதிகார முனைப்புடையவர்களாகக் காங்கிரசு ஆளவந்தார்கள் ஆட்சிபீடத்திலிருந்து ஆடிப் பாடி வருகின்றனர்.

அவர்களுடைய சர்வாதிகார உளப்பாங்கிற்கும் மக்களை மதிக்காத அலட்சிய நடத்தைக்கும், வாக்குறுதியை மீறி நடந்துகொள்ளும் அறத்தின் நீங்கிய அரக்கத்தன்மைக்கும் மாகாண சீரமைப்பில் காங்கிரசு ஆளவந்தார்கள் காட்டிய தான்தோன்றிச் செயலொன்றே போதிய சான்றாகும். மொழியை அடிப்படையாகக்கொண்டு மாகாணங்களைத் திருத்தி உருவாக்கவேண்டும் எனப் பல்லாண்டுகளாகக் கூறிவந்தவர்கள், அதையே தேர்தல் வாக்குறுதியாக மக்களிடம் அறிவித்துவந்தவர்கள், இமை மூடித் திறக்கும்முன் மாற்றிக்கொண்டுவிட்டனர். அக்கருத்தே இந்தியத் துணைக் கண்டத்தைச் சீரழித்துவிடக் கூடிய பயங்கரமானது என்றும்கூடச் சொல்லும் எல்லைக்குச் சென்றுவிட்டனர்.

அவர்களுடைய போக்கில் வெளிப்படையாகத் தெரியும் கொள்கை முரண்பாட்டையும் வாக்குறுதி மீறலையும், தங்களுக்குச் சூழும் மகத்தான துரோகத்தையும் கண்டு மக்கள் கொதித்தெழுந்தனர். இந்த மக்கள் எழுச்சியில், அரசியல் கட்சி பேதங்கள்கூடச் சிற்சில இடங்களில் மறைந்து ஒழிந்ததைக் கண்டோம்.

கட்சி பேதங்களை மறந்து காங்கிரசு ஆளவந்தார்களின் துரோகச் செயலுக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்த மக்கள் இயக்கத்தை, மற்ற எழுச்சிகளுக்குச் சூட்டுவது போன்றே, அரசியல் நினைப்புடன் மேற்கொள்ளப்பட்ட ஆபாசக் கிளர்ச்சி என, இந்த ஆளவந்தார்கள் கூறத் தயங்கவில்லை; தங்களுக்கு எதிராகக் கிளம்புகின்ற மக்கள் எழுச்சிகள் அனைத்தையும், அரசியல் காரணம் கொண்டவை எனக் குறை கூறிக்கூறி சிறந்த பயிற்சி பெற்றுவிட்டிருக்கின்ற காரணத்தால், மொழி வழி கோரிக்கையை வலியுறுத்திய மக்கள் எழுச்சியையும் அதே பெயரிட்டழைக்க ஆளவந்தார்கள் முன்வந்தனர் என்பதில் ஐயமில்லை.

வழக்கமான அக்குற்றச்சாட்டைத் தவிர, வேறு ஒரு புதிய பழிச் சொல்லையும் அம்மகத்தான மக்கள் எழுச்சிக்குச் சூட்ட இந்தியப் பிரதமர் நேரு அவர்கள் துணிந்தார். வெளிநாட்டுப் பொருள் பலத்திலும் தூண்டுதலிலும் அம்மக்கள் எழுச்சி எழுந்தது என்ற ஒரு கட்டுக்கதையை, முதல் முதலாக வீசத் தொடங்கினர். 'வெளிநாடு' என்ற சொல்லில் 'வெளிநாட்டு அரசுகள்' எனப் பொருள் கொள்வதும் சாத்தியமாகும் என்ற வாதம் கிளப்பப்பட்டது. அவ்வாதம் கிளம்பியதும், 'வெளிநாடுகள்' எனத் தாம் குறிப்பிட்டதும், 'பிறநாட்டு அரசுகள்' என்ற பொருளில் அல்ல என நேரு அவர்களே பின்னர் விளக்கம் தந்திருந்தார்.

இந்தியத் துணைக்கண்டத்தில் குழப்பங்களை விளைவிக்க வேண்டும் என்ற நினைப்பில் இருக்கும் பிறநாட்டார் யார்; இங்குள்ளார்களுக்கு அவர்களுடைய உதவி எப்படி கிடைக்கப் பெறுகிறது; யார் யார் அந்த உதவியை இங்கு பெற்றிருக்கின்றனர்; அவ்வுதவியை எப்படி பெறுகின்றனர் என்பன வற்றிற்கெல்லாம் இன்னமும் விளக்கம் கூறாமலே இருந்து வருகிறார் இந்தியப் பிரதமர் நேரு.

இந்நிலையில், தனது தந்தையின் வழியைப் பின்பற்றி, அவருடைய திருமகளான இந்திரா காந்தி அம்மையார் அதே பழியை மீண்டும் காங்கிரஸ் எதிர்ப்பாளர்கள் மீது வீசியிருக்கிறார்கள். அம்மையாருக்கு, மாற்றுக் கட்சியினர் குறித்துப் பழி கூறுவதற்கு எத்தகைய தகுதிகள் இருந்த போதிலும், அவை அனைத்திலும் சிகரமாக இருந்துவருவது 'இந்தியப் பிரதமரின் மகள்' என்ற தனிச் சிறப்பேயாகும் என்பது அனைவரும் அறிந்துள்ள உண்மையாகும்.

தகப்பனார் குற்றச்சாட்டைப்போல் இல்லாமல், உதவி செய்துவரும் வெளிநாட்டார்—உதவி பெற்றுவரும் உள்நாட்டார் பற்றிய 'திட்டவட்டமான தகவல்' தமக்குத் தெரியும் என இந்திரா காந்தியார் அறிவித்துள்ளார்கள். தமக்குத் தெரிந்துள்ள 'திட்டவட்டமான உண்மை'யை ஏன் வெளிப்படையாகக் கூறாமல், இன்னமும் தாம் மூடுமந்திரமாக வைத்திருக்கவேண்டும் என்பதற்குரிய நியாயத்தைப் பொது மக்கள் அறிய தெளிவாக்கிவிட வேண்டியது, அம்மையாரின் நீங்காக் கடமையாகும்.

அதற்குரிய துணிவு அம்மையாருக்கு இல்லை என்று எவராலும் கூறமுடியாது. அத்தகுத் துணிவு இந்தியப் பிரதமரைத் தந்தையாகக் கொண்ட இந்திரா அம்மையாருக்கே இல்லாமலிருக்கிறது என்றால், மற்றவர்களிடம் அத்துணிவை எதிர்பார்ப்பது இயலாததாகும். அம்மையார் தமக்குத் தெரிந்துள்ள உண்மையை நாட்டு மக்களுக்கும் அறிவித்தாக வேண்டும்.

உண்மையைக் கூற அம்மையார் மறுப்பார்களானால், தந்தையாரைப் போலவே, அவர் வழியில் சென்று தம்முடைய பங்கிற்கு, இத்துறையில் ஏதாவது கூறிவைப்போம என்ற கருத்தில் இவ்வாறு சொல்லலங்காரமாகப் பேசி இருக்கிறார்கள் என்றே அறிவுலகம் எள்ளி நகையாடும்.

'கம்யூனிச உலகம்' பிளவுபட்டுக் கிடக்கிறது'

'ரஷ்யக் கம்யூனிஸ்டுகளே இரு கோஷ்டிகளாகப் பிரிந்து நிற்கின்றனர்'

'ஹங்கேரி பற்றி கருத்து வேறுபாடுகள்'

யூகோ பத்திரிகை தரும் தகவல்

பெல்கிரேட், நவ. 17—
"கம்யூனிச உலகம் இரண்டாகப் பிளவுபட்டு நிற்கிறது" என்று யூகோ சர்க்கார் பத்திரிகையான 'பொலிடிகா' என்ற இதழ் எழுதியுள்ளது.

ஸ்டாலினிஸ்டுகள் என்றும் ஜனநாயகப்படுத்துவோர் என்றும் இரு பிளவுகள் தோன்றியிருப்பதாக அந்த இதழ் கூறுகிறதாம்!

அல்பேனியா, பல்கேரியா, செக்கோஸ்லோவேக்கியா, ருமேனியா, பிரான்ஸ் ஆகிய நாட்டு கம்யூனிஸ்டு கட்சிகள் ஸ்டாலினிஸ்டுகளாகவும் யூகோ, போலந்து, இத்தாலி, ஹங்கேரி நாட்டு கம்யூனிஸ்டு கட்சியினர் ஜனநாயகப்படுத்துவோராகவும் விளங்குகின்றனராம்!

ஹங்கேரியில் உள்ள காதர் சர்க்கார், மக்களின் நிர்ப்பந்தத்தினால், சுதந்திரமாகக் கம்யூனிசத்தை அமுல் செய்ய முடியும் என்ற டிட்டோ கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கின்றனராம்!

இந்தப் பிளவின் விளைவு மாஸ்கோவைப் பொறுத்தது என்றும் அந்தப் பத்திரிகை கருதுகிறதாம்!

இந்தப் பிரச்சினையில் ரஷ்யக் கம்யூனிஸ்டுகளே இரு கோஷ்டிகளாகப் பிரிந்திருக்கின்றனர் என்றும், ஒன்று (ஜனநாயகப்படுத்தும் கோஷ்டி) குருஷ்சேவ் தலைமையிலும், மற்றொன்று (ஸ்டாலினிஸ்டு கோஷ்டி) மாலடோவ் தலைமையிலும் இயங்கிவருகின்றனவாம்!

கம்யூனிச உலகில் ஏற்பட்டுள்ள பிளவினை, ஹங்கேரி விவகாரம் பற்றி அந்தந்த நாட்டு கம்யூனிஸ்டுகள் வெளியிட்டுவரும் செய்திகளைப் பார்த்தாலே தெரியும் என்றும் 'பொலிடிகா' கூறுகிறதாம்!

'ஸ்டாலினிஸ்டு'களாயிருக்கும் நாடுகள், ஹங்கேரி நிலை எதிர்ப் புரட்சிக்காரர்களால் தோற்றுவிக்கப்பட்டது என்றும், 'ஜனநாயகம்' விரும்பும் நாடுகள், 'அது ஸ்டாலினிசத்தின் விளைவு' என்று கருதுவதாகவும் அந்தப் பத்திரிகை கூறுகிறது.

சென்னையில் குழந்தைகள் பிறப்பு விகிதம் அதிகம்

சுகாதார அதிகாரி அறிக்கை

சென்னை, நவ. 19—
சென்னை நகரசபையின் சுகாதார அதிகாரி 1955-ம் ஆண்டின் சுகாதார அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

அதில் நகரத்தின் சுகாதாரம், பொதுவாக நன்றாகயிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

உணவுப் பண்டங்களில் கலப்பு செய்ததற்காக சென்ற ஆண்டில் 1,965 வழக்குகள் தொடரப்பட்டனவாம்; இந்த ஆண்டில் 1,732 வழக்குகளாக அது குறைந்துள்ளதாம்.

நகரத்தில் பிறப்பு அதிகரித்துள்ளது; சென்ற ஆண்டில் 59,252 குழந்தைகளும, இந்த ஆண்டில் 66,449 குழந்தைகளும் பிறந்துள்ளவைதாம். இதைப்போலவே இறந்தவர்களின் எண்ணிக்கை சென்ற ஆண்டில் 33,181 ஆக இருந்தது, இந்த ஆண்டில் 34,264 ஆக உயர்ந்துள்ளது.

புளியந்தோப்பிலுள்ள காச நோய் விடுதியில இந்த ஆண்டில் 9,862 பேர்களுக்கு வசதியளிக்கப் பட்டதாம்.

15,098 மாணவர்களுக்கும் 12,375 மாணவிகளுக்கும் மருத்துவப் பரிசோதனை நடத்தப்பட்டதாம்.

நகரத்தில் 37 குழந்தை நல நிலையங்களும் உள்ளனவாம்.

இந்த ஆண்டில், 16,192 பேர்களுக்குக் குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளதாம். தற்போது உள்ள 4 நிலையங்களோடு 6 புதிய குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள் அடுத்த ஆண்டு திட்டத்தில் நிறுவப்படுமாம்.

ரூ. 61 இலட்சம் மதிப்புள்ள பழைய காகிதங்கள்

வெளிநாடுகளிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதி?

இங்கேயே உற்பத்தி செய்யும் திட்டம் தோல்வியுற்றதா?

கல்கத்தா, நவ. 19—
1955—56-ம் ஆண்டில் இந்தியாவுக்கு 1 இலட்சம் டன் பத்திரிகைக் காகிதம் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டிருந்தது; ஆனால் அந்த அளவு பயன்படுத்தப்படவில்லை.

முதல் ஐந்தாண்டு காலத்தில் 50,000, 54,000, 70,000, 79,000, 75,000 டன்களே பயன்படுத்தப்பட்டுள்ளது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் மொத்தம் 27,000 டன் பத்திரிகைக் காகிதம் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டிருந்தது; பல இடையூறுகளின் காரணமாக அந்த அளவு நிறைவேற்ற முடியவில்லை; 1955—56ல் 4,200 டன் பத்திரிகைக் காகிதமே உற்பத்தி செய்யப்பட்டதாம்.

பழைய காகிதம்

இந்தியா வெளிநாடுகளிலிருந்து ரூ. 60 இலட்சம் மதிப்புள்ள பழைய காகிதங்களை இறக்குமதி செய்கிறது.

1955—56ல் அதிகப்படியான பழைய காகிதங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது; இந்தப் பழைய காகிதங்கள் 'பாக்கிங்' வேலைகளுக்குத் தேவைப்படுகிறது.

இந்தியாவில் தயாரிக்கப்படும் இந்திய 'பாக்கிங்' காகிதத்தின் விலை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பழைய காகிதங்களின் விலையைவிட அதிகமாக இருக்கிறதாம்.

தெரிந்து கொள்ளுங்கள்

இந்தியாவில் அந்நிய நாடுகள் முதலீடு செய்துள்ள தொகையின் மொத்த அளவு 1948-லிருந்து 1853-க்குள் ரூ. 112·12 கோடி அதிகரித்திருந்தது.

இந்தியாவில் சோடா தூள் உற்பத்தி, 1946-ல் மொத்தம் 12,000 டனாக இருந்தது, 1955-ல் 77,270 டனாக உயர்ந்துவிட்டது.

இலங்கை இந்தியர் குடியுரிமை மனுக்கள்

மிகப் பெரும் அளவில் நிராகரிக்கப்படுகின்றன

புதுடில்லி, நவ. 20—
இலங்கை இந்தியரின் குடியுரிமை மனுக்கள், 'பைசல்' செய்யப்படுவதில் அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதாக மாநிலங்கள் சபையில் பண்டித நேருவின் செயலாளர் கூறியிருக்கிறார்.

இந்த ஆண்டு ஜனவரி முதல் ஆகஸ்டு வரை 9,086 நபர்கள் சார்பில் தாக்கலான 2,432 மனுக்கள் ஏற்கப்பட்டன என்றும், 1,62,139 நபர்கள் சம்மந்தப்பட்ட 50,381 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன என்றும், சென்ற ஆண்டில் இதே காலத்தில் 1,579 பேருக்கான 366 மனுக்கள்தான் ஏற்கப்பட்டன என்றும், 55,266 பேருக்கான 17,607 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன என்றும் அவர் தகவல் தந்திருக்கிறார்.

அந்தமான்-நிக்கோபார் தீவுகளில் புதிய தொழிற்சாலைகள்

மாநிலங்கள்சபையில் தகவல்

புதுடில்லி, நவ 20—
இந்தியா சுதந்திரம் பெற்றபின் அந்தமான்—நிக்கோபார் தீவுகளில் மரம் அறுக்கும் ஆலைகள் மூன்று, மரக்கலங்கள் கட்டுவதற்கான சிறிய கப்பல் கட்டும் தளம் ஒன்று, கயிறு, சிறு தொழில் உற்பத்திப் பொருள்கள் ஆகியவைகளைத் தயாரிப்பதற்காக இரண்டு தொழிற்சாலைகள் ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளனவாம்!

இத்தொழில்களில் மொத்தம் ரூ. 8,91,800 முதலீடு செய்யப்பட்டிருக்கிறதென்றும் மொத்தம் 354 பேர் இவற்றில் வேலை செய்து வருகின்றனர் என்றும், மாநிலங்கள் சபையில் தகவல் தரப்பட்டுள்ளது.

* * *

சுமார் 6 கோடி செலவில் தீவுகளின் அபிவிருத்தி

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில அந்தமான், நிக்கோபார் தீவுகளின் அபிவிருத்திக்கு ரூ. 5,92,50,000 அனுமதிக்கப்பட்டிருக்கிறதென்றும் மொத்தம் 18 அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறதென்றும் மக்கள் சபையில் தகவல் கூறப்பட்டுள்ளது.

இந்திய சர்க்கார் இரயில்வேக்கள், 1955—56-ல் மொத்தம் 11,40,50,000 டன் சாமான்களை ஏற்றிச் சென்றன. சரக்குகள் போக்குவரத்துமூலம் இவ்வருடத்தில் மொத்தம் ரூ. 177·43 கோடி வருமானமாகக் கிடைத்தது.

கழகச் செய்திகள்

வாண்டையாயிருப்பு தி. மு. கழகம்

15-11-56 மாலை 6 மணிக்கு தோழர் மகாலிங்கம் தலைமையில் கழகப் பொதுக்கூட்டமும், பின்னர் தோழர் பி. ஏ. லிங்கன் தலைமையில் நிர்வாகிகள் தேர்தலும் நடைபெற்றது. செயலாளர், மாவட்டப் பிரதிநிதி: கோ. தட்சிணாமூர்த்தி; துணைச் செயலாளர்: சி. சந்திரகாசன்; பொருளாளர்: ம. தனபாலன்; 11 பேரடங்கிய செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

உடுமலைப்பேட்டை தி.மு.க.

11-11-56 மாலை 6 மணிக்கு, தோழர் வெ. காளியப்பன் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், புதிய தமிழகத்தில் மற்ற மாநிலங்களிலுள்ள தமிழ்ப் பகுதிகளை இணைக்குமாறு கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூடுவாஞ்சேரி தி. மு. கழகத் துவக்கம்

16-11-56 மாலை 6 மணிக்கு, செங்கற்பட்டு மாவட்டம் கூடுவாஞ்சேரி தி. மு. கழகத் துவக்க விழா தோழர் தி. ந. சம்பந்தம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கண்ணதாசன், எஸ். எஸ் தென்னரசு, ஜே. ஏ. வகாப் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கும்மிடிபூண்டி தி. மு. க.

10-11-56 மாலை, கும்மிடிபூண்டி தி. மு. கழகச் செயற்குழுக்கூட்டம் நடைபெற்றது. அடுத்த கூட்டத்தில் வரவு—செலவு கணக்கு சரி பார்ப்பது என்றும், மற்றும் சில முக்கியத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

பரமக்குடி தி. மு. கழகம்

11-11-56 இரவு 10-மணிக்கு, கழகப் பணிமனையில் தோழர் டி. எம். ஆர். லிங்கன் தலைமையில் நடைபெற்ற பொது உறுப்பினர் கூட்டத்தில் தோழர் எம். வி. இராசு முன்னிலையில் தேர்தல் நடைபெற்றது. செயலாளர்: எம். ஏ. வகாப்; துணைச்செயலாளர்: கே. ஆர். வீரமலை; பொருளாளர்: சி. வி. முத்துசாமி; மாவட்டப் பிரதிநிதி: டி. எம். ஆர். லிங்கன்.

காவேரிநகர் தி. மு. கழகம்

புதுக்கோட்டையில் தோழர் தங்கராசு தலைமையில் நடைபெற்ற காவேரிநகர் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டத்தில், கழக ஆக்க வேலை, கழக வளர்ச்சி குறித்துப் பலர் பேசியபின். தேர்தல் நிதி சேர்ப்பது சம்பந்தமான தீர்மானமொன்றும் மேற்கொள்ளப்பட்டது

கடலூர் நகர தி. மு. கழகம்

10—11—56 இரவு 9-மணிக்கு தோழர் சி. கோவிந்தராசன் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் 28—10—56-ல் நடைபெற்ற கூட்ட வரவு-செலவுகள் ஒப்புக்கொள்ளப்பட்டது. தெ. ஆ. மாவட்டச் செயலாளர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., அவர்கள் விசேட அழைப்பின்பேரில் கலந்துகொண்டார்.

புதுவை வட்டத்தில்...

குருவிநத்தம் தி. மு. கழகத் திறப்பு விழா

10—11—56 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு மேற்படியூரில் தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் கழகத் திறப்பு விழா நடைபெற்றது தோழர் சு. பெருமான் கழகக் கொடியேற்றினார். தோழர் சி பி. சிற்றரசு சொற்பொழிவாற்றினார்.

பரகூரில் கழகத் திறப்பு

11—11—55 மாலை 6 மணிக்கு தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. தலைமையில் கழகத் திறப்பு விழா நடைபெற்றது. தோழர் ச. சிவப்பிரகாசம் கழகக் கொடியேற்றினார். தோழர் சு பெருமான் விவசாய சங்கத்தைத் திறந்துவைத்தார். தோழர் சி. பி. சிற்றரசு கழகத்தைத் திறந்து வைத்தும், தோழர் செ. கோவிந்தராசன் கழகத் தோழர்கள் கடமை குறித்தும் பேசினர்.

புறக்கோட்டை (இலங்கை) தி. மு. கழகம்

11—11—56 மாலை 4 மணிக்கு தோழர் தருமதாசன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில் முக்கிய முடிவுகள் சில மேற்கொள்ளப்பட்டன.

அர்ச்சுனபுரம் தி. மு. க. துவக்க விழா

11—11—56 மாலை 6 மணிக்கு தோழர் கோ. வேந்தன் தலைமையில் கிளைக் கழகத் துவக்க விழா நடைபெற்றது. தோழர்கள் செ. ம ரங்கசாமி, வே. ஆ. இளஞ்செழியன் ஆகியோர்பேசினபின் தோழர் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி அவர்கள் கழகக் கொடியேற்றிவைத்துச் சொற்பொழிவாற்றினார். பின்னர் நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது. செயலாளர்: கெ. துரைசாமி; துணைச்செயலாளர்: ஏ. ஜி. புருடோத்தமன்; பொருளாளர்: எல். பி. கன்னையன்; மாவட்டப் பிரதிநிதி: கோ. வேந்தன்.

திருப்புத்தூர் (இராமநாதபுரம் மா.) தி. மு. கழகம்

13—11—56 இரவு 10 மணிக்கு கருணாநிதி படிப்பகத்தில் தோழர் வை. கணபதி தலைமையில் நடைபெற்ற கிளைக் கழக உறுப்பினர் கூட்டத்தில் தேர்தல் நிதி திரட்டி அனுப்புவதென்றும், மற்றும் சில முக்கியத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

* * *

பொதுத் தேர்தல் குழு அமைப்பு

18—11—56ல், திருக்கோட்டியூர் தொகுதி தி. மு. கழக பொதுத் தேர்தல் குழு அமைப்புக் கூட்டம் தோழர் அழகு தலைமையில் நடைபெற்று, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: பெரி. அழகு; துணைச்செயலாளர்: மரி. செபத்தி; பொருளாளர்: மூ. அ. ந. அழகு 24 ஊர்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பம்பாய் தி. மு. கழகம்

4—11—56 மாலை $6\frac{1}{2}$ மணியளவில் 'திராவிடரக'த்தில் தோழர் எஸ். தியாகராசன் தலைமையில் நடைபெற்ற பம்பாய் மத்தியக்குழுக் கூட்டத்தில் முக்கிய சில முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

அணுசக்தியின் மூலம் இரயில்கள் ஓடும்!

அணுசக்தியின் மூலம் இரயில்களை ஓட்ட முடியும் என்றும், அதற்கான எஞ்சின்களைத் தயாரிக்க அமெரிக்கா முனைந்துள்ளது என்றும் தகவல் தரப்பட்டுள்ளது.

பம்பாய்—மாதுங்கா தி. மு. கழக ஆண்டுவிழா

15—11—56 இரவு 7-மணிக்கு, நப்பூ கார்டனில் தோழர் இ. சு. சபிச்சையா தலைமையில் கிளைக் கழக 3-வது ஆண்டு நிறைவு விழா நடைபெற்றது. தோழர் தொ. து. அன்புச்செழியன் வரவேற்புரையாற்றினார். 'தேசிய, சர்வ தேசியக் கண்ணோட்டமும், திராவிட நாடு பிரச்சினையும்' என்ற தலைப்பில் தோழர் டி. கே. சீனிவாசன் சொற்பொழிவாற்றினார். காமன்வெல்த்திலிருந்து இந்தியா விலக வேண்டுமென்று கேட்டுக்கொண்டும், மற்றும் அனுதாபத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. தேர்தல் நிதிக்குக் கூட்டத்தில் ரூ. 10—6—3 வசூலிக்கப்பட்டது.

பம்பாய்—கொலாபா தி. மு. கழகம்

8—11—56 இரவு $9\frac{1}{2}$ மணிக்கு கூபரேஜ் திடலில் தோழர் எ. பி. இ. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தில் பல முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன

பம்பாய்—தாராவி தி.மு.க.

3—11—56 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு, 'திராவிடரக'த்தில் தோழர் பி. எஸ். கலைச்செல்வன் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில் 10 பேரடங்கிய தேர்தல் நிதி வசூல் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. தோழர்கள் பலர் கழக ஆக்க வேலைகள் குறித்துக் கருத்துரைகள் வழங்கினர்.

10—11—56 இரவு $7\frac{1}{2}$ மணிக்கு தோழர் எல். என். செழியன் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழக அவசரச் செயற்குழுக் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானமொன்றும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

தாம்பரம் தி. மு. கழகம்

1—11—56 காலை 10 மணிக்கு கழகப் பணிமனையில் தோழர் பி. இருதயராசு தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: எஸ். ஏ. கமால்; துணைச் செயலாளர்: எல். இராசமாணிக்கம்; பொருளாளர்: வி. ஆறுமுகம்; மாவட்டப் பிரதிநிதி: முனு. ஆதி. செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அன்பளிப்பு

பெரியகுளம் தென்கரை தோழர் சின்னத்துரை—தோழியர் சரோஜா அவர்கள்மூலம் ரூ. 2-ம், தோழர் இராசரத்தினம்—தோழியர் ஜோதி அவர்கள்மூலம் ரூ. 1-ம் ஆக ரூ. 3 'நம் நாடு' வளர்ச்சிக்கு அன்பளிப்பாகத் தரப்பட்டது. வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்]

ஆ. வேலு — சின்னபிள்ளை திருமணம்

தேர்தல் நிதிக்கு ரூ.25 அன்பளிப்பு

14—11—56 இரவு 9 மணிக்கு இலங்கை கல்கடுவ தோட்டத்தில் தோழர் அண்ணாதாசன் தலைமையில் தோழர் ஆ. வேலு—தோழியர் சின்னபிள்ளை திருமணம் நடைபெற்றது. தோழர்கள் வே. கதிர்வேல், வே. தங்கவேல், வீ. கே. வேலாயுதம், ச. பொன்னம்பலம் ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர். இத்திருமண நினைவாக தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு ரூ. 25 அன்பளிப்பு தரப்பட்டது.

* * *

குமாரம் தோழர் இரத்தினம்—தோழியர் சொர்ணம் ஆகியோர் திருமண நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

14—11—56-ல், பொன்மலை—மேலக்கண்டார்கோட்டையில் தோழர் அம்பில் தர்மலிங்கம் தலைமையில் தோழர் ஆர். முருகன்—தோழியர் இராசாம்பாள் திருமணம் நடைபெற்றது. தோழர்கள் ஜி. பராங்குசம், எல். கிருஷ்ணமூர்த்தி, ஏ. கனகரத்தினம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கிளைக் கழகச் சார்பில் வாழ்த்திதழும், நண்பர்கள் உறவினர்கள் சார்பில் பரிசுகளும் மணமக்களுக்கு வழங்கப்பட்டன. இது நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

14-11-56ல் நடைபெற்ற கோவை மாவட்டம் குன்னத்தூர் தோழர் செயச்சந்திரன்—தோழியர் அலமேலு திருமணம் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 2 அன்பளிப்பு தரப்பட்டது.

* * *

9-11-56 காலை 7 மணிக்கு காஞ்சிபுரம் கிழண்டை இராசவீதி யாதவ சத்திரத்தில், தோழர் கோவர்த்தனன் — தோழியர் கிருஷ்ணவேணி திருமணம், தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், சி. வி. எம். அண்ணாமலை எம்.சி., இராம. அரங்கண்ணல், ஈழத்தடிகள், இரா. வெங்கடேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 5 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

ஃ ஃ ஃ

15-11-56 காலை 9 மணிக்கு புதுவை முதலியார்பேட்டையில் தோழர் எல். தாமோதரன்—தோழியர் ருக்குமணியம்மை திருமணம் தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் இராமச்சந்திரன், வெங்கடேசன், கோ. பாண்டியன், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பு தரப்பட்டது.

[அன்பளிப்புத்தொகைகள் யாவும் வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்]

பிறப்பு

சிவகாசி நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் சா. இராமசாமி அவர்களின் துணைவியார் ஓர் ஆண் மகவுக்குத் தாயானார். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

மதுரை மாவட்டம் ஊரல்பட்டி தோழர் ச. பழனிச்சாமி அவர்களது துணைவியார் 14-11-56-ல் ஓர் ஆண் மகவுக்குத் தாயானார். இது நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பு தரப்பட்டது.

[அன்பளிப்புத்தொகைகள் யாவும் வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்]

ஏன்? என்ன காரணம்?

புதுடில்லி, நவ. 19—

பெங்களூரிலுள்ள இந்துஸ்தான் விமானத் தொழிற்சாலையில் இதுவரையில் 'எச். டி. 2' என்ற பயிற்சி விமானங்கள் 120 தயாரிக்கப்பட்டனவாம்.

அவைகள் வெளிநாட்டவருக்கு ஓட்டிக் காட்டப்பட்டும், இதுவரையில் ஒரு விமானத்தைக்கூட அந்நிய நாட்டவர் வாங்கவில்லை என்று மத்திய தற்காப்பு அமைச்சர் மஜீதியா மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

1956-ல் முதல் ஆறுமாத காலத்தில் இந்தியாவில் மொத்தம் 4182 டீசல் மோட்டார் வண்டிகள் உற்பத்தி செய்யப்பட்டன.

அண்ணா தலைமையில்

அலமேலு - பெரியசாமி திருமணம்

தோழர் எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ., அவர்களின் மைத்துனர் திரு. ஆறுமுகம் அவர்கள் செல்வி அலமேலு—தோழர் பெரியசாமி திருமணம் 18-11-56 காலை 10-30 மணிக்கு பெத்தநாய்க்கன்பாளையத்திலுள்ள மணமகன் இல்லத்தில் சிறப்புற நடைபெற்றது. உள்ளூர் பிரமுகர்களும், கழகத் தோழர்களும் பொதுமக்களும் ஏராளமாகத் திரண்டிருந்தனர்.

தோழர் எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ. அனைவரையும் வரவேற்று, அண்ணா அவர்களைத் தலைமை தாங்கித் திருமணத்தை நடத்திக்கொடுக்குமாறு கேட்டுக் கொண்டார்.

அண்ணா திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களைப் பாராட்டிப் பேசினார்கள்.

மற்றும் சேலம் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் ஜி பி. சோமசுந்தரம், ஒய் எஸ் அருணாசலம், ஆனைமுத்து, சிற்றுளி-சுப்பிரமணியம், மா. கி. தசரதன், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் ஆகியோர் மணமக்களைப் பாராட்டியும் சீர்திருத்தத் திருமணத்தின் அவசியத்தை விளக்கியும் பேசினர். மணமக்களுக்கு ஏராளமான வாழ்த்துரைகளும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

* * *

இராமன்—அங்கம்மாள்

இத்திருமணம் முடிந்ததும், அதே பந்தலில் பெத்தநாய்க்கன்பாளையத்தைச் சார்ந்த தோழர் இராமன்—தோழியர் அங்கம்மாள் திருமணத்தையும் அண்ணா அவர்கள் நடத்திவைத்தார்கள். மணமக்களை அனைவரும் வாழ்த்தினர்.

இறுதியாக தோழர் எம். பி. சுப்பிரமணியம் நன்றிகூற திருமண நிகழ்ச்சிகள் இனிது முடிவுற்றன.

பெயர் சூட்டல்

திருவொற்றியூர் தோழர் என். சுப்பராயன் அவர்களின் ஆண் மகவுக்கு, மகளிர் மன்றத் துவக்க விழாவின்போது அண்ணா அவர்கள், 'மதியழகன்' என்று பெயர் சூட்டியதின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 தரப்பட்டது.

ஃ ஃ ஃ

தில்லைவிளாகம் கழுவங்காடு தி. மு. கழகத் தோழர்: உ. நடேசன் அவர்களது துணைவியார் தோழியர் வேதம்மாள் ஓர் ஆண் மகவுக்குத் தாயானார். அம் மகவுக்கு, தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களால் 'பொன்முடி' எனப் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 5 அன்பளிப்பு தரப்பட்டது.

ஃ ஃ ஃ

மதுரை தானமுத்து—நடராசன் நினைவுப் படிப்பகத் தோழர் பே. தேவசகாயம்—அன்னத்தாய் அவர்களது பெண் மகவுக்கு 14-10-56ல் 'தமிழரசி' எனப் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2, அன்பளிப்பாகத் தரப்பட்டது.

[அன்பளிப்புத்தொகைகள் யாவும் வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்]

மாயவரத்தில் தென்பகுதி இரயில்வே தொழிலாளர் சங்கத் துவக்கம்

மாயவரம், நவ. 21—

கடந்த 18-ந் தேதியன்று மாயவரத்தில் தென்பகுதி இரயில்வே தொழிலாளர் சங்கக் கிளை ஒன்று அமைக்கப்பட்டு, தோழர்கள் மகாலிங்கம், பி. இராசு, கிருஷ்ணமூர்த்தி, கணபதி ஆகியோர் முறையே தலைவர், செயலாளர், துணைச் செயலாளர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

அன்று மாலை மாயவரம் இரயிலடிக்கு அருகிலுள்ள திடலில் தோழர் மகாலிங்கம் தலைமையில் மேற்படி சங்கத் துவக்க விழாக் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் டி. வி. ஆனந்தன், கே இராமச்சந்திரன், ஜி. பராங்குசம், எஸ் இராகவானந்தம், கண்ணன், கோவிந்தராசு, சூரியநாராயணமூர்த்தி ஆகியோர் சங்க வளர்ச்சி பற்றியும், தொழிலாளர் ஒற்றுமை பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

(ந - நி)

தொழிலாளரிடையே போட்டிச் சங்கம்

முறியடிக்க மேற்கொண்ட முயற்சியில் முழு வெற்றி

சென்னை, நவ. 21—

சென்னையை அடுத்த ஆவடியிலுள்ள 'வேக்கில் டிப்போ'வில் கடந்த சில தினங்களாக இரு தொழிற் சங்கங்கள் இயங்கி, தொழிலாளர் மத்தியில் போட்டி மனப்பான்மை, ஒற்றுமையின்மை ஆகியவை தலைதூக்கி நின்றன.

தொழிலாளரிடையுள்ள இப் போட்டி மனப்பான்மையைத் தவிர்க்கவேண்டும் என்ற நல்லெண்ணம் படைத்த சில தொழிலாளர்கள், தோழர்கள் எ. வி. பி. ஆசைத்தம்பி, என். சிவரத்தினம் ஆகியோரை நீதிபதிகளாகக்கொண்ட ஒரு சமாதானக்குழு ஏற்படுத்தி, கடந்த 15-ந் தேதியன்று சென்னை ஆண்டியப்பகிராமணி தெருவிலுள்ள திருவள்ளுவர் முன்னணிக் கழகத்தில் இரு சங்க இணைப்புக் கூட்டம் ஒன்றை கூட்டியிருந்தனர். அந்தக் கூட்டத்தில் மேற்படி இரண்டு சங்கங்களையும் சேர்ந்த தொழிலாளர்களும் கலந்துகொண்டனர்.

மேற்படி இருசாராரும் தங்கள் தங்கள் சங்கத்தைக் கலைத்துவிட்டு புதிய சங்கமொன்றை நிறுவுதல், ஜனநாயகமுறைப்படி தொழிலாளி ஒருவரை தலைவராகத் தேர்ந்தெடுத்தல், இரு சங்கச் சார்புடைய தோழர்களடங்கிய நிர்வாகக்குழு அமைத்தல், இருசாராரும் விரும்பும் வெளித் தலைவர்கள் கொண்ட ஆலோசனைக் குழு அமைத்தல், இவற்றை நடைமுறைக்குக் கொண்டுவர தோழர்கள் ஆசைத்தம்பி, சிவரத்தினம் ஆகியோர் தலைமையில் இரு சாராரையும் சேர்ந்த ஐந்தைந்து உறுப்பினர் கொண்ட குழு அமைத்தல் ஆகிய ஐந்து தீர்ப்புகளுக்கிணங்கி, மேற்படி இருசங்க நிர்வாகிகளும் அத்தீர்ப்புப்படி நடந்துகொள்வதாக வாக்களித்தனர். (ந. - கி.)

ஈடனுக்கு பிரதமர் பதவியிலிருந்து சீட்டு?

லண்டனில் பலமான வதந்திகள்

லண்டன், நவ 21—

சர் அந்தோணி ஈடன் தொடர்ந்து பிரதமராக இருக்க மாட்டார் என்று இங்கு பலமான வதந்திகள் உலவுகின்றனவாம்!

நிரந்தரமாகப் பதவியிலிருந்து விலகிக்கொள்வதற்காகவே ஈடன் இப்போது உடல் நலமில்லை என்று தந்திரமாக அறிவித்திருக்கிறார் என்று ஒரு வதந்தி உலவுகிறதாம்.

மற்றொரு வதந்தி, ஈடனுக்கு மந்திரி சபையிலேயே பலத்த எதிர்ப்பு இருப்பதாகவும், எகிப்தில் தொடர்ந்து பிரிட்டிஷ் துருப்புகளை வைத்திருப்பதற்கு, மந்திரி சபைக்குள்ளேயே எதிர்ப்பு வலுத்து வருவதாகவும் கூறுகிறது.

ஈடனின் மிக நெருங்கிய நண்பர்கள் கூட, சூயஸ் தகராறு தோன்றிய நாளிலிருந்து ஈடனுடைய கொள்கைக்கு எதிர்ப்புக் காட்டி வருவதாகவும், அதுவே இந்த நிலைக்கு ஈடனைக் கொண்டு வந்திருப்பதாகவும் மற்றொரு வதந்தி கூறுகிறதாம்.

வ. உ. சி. விழா

சென்னை—இராயபுரம் தூய இராயப்பர் உயர்நிலைப் பள்ளி மாணவர் இலக்கிய மன்றச் சார்பில் 23—11—56 மாலை 3-30 மணிக்கு திரு. பொன்னுசாமி அவர்கள் தலைமையில் வ. உ. சி. விழா நடைபெறும்; தோழர் க. அறிவழகன் சொற்பொழிவாற்றுவார்.

திருத்தம்

கடந்த 20—11—56 இதழில் 'யாதும் ஊரே! யாவரும் கேளிர' என்று செய்திக்குத் தலைப்பிடப்பட்டிருப்பதை, 'யாதும் ஊரே! யாவரும் கேளிர்' என்று திருத்தி வாசித்துக்கொள்ள வேண்டுகிறோம். (ஆ-ர்.)

நடிப்பிசைப் புலவர்

கே. ஆர். இராமசாமி

அவர்களுக்குப் பாராட்டுக்கூட்டம்

★

25—11—56 மாலை 6 மணிக்கு சென்னை — கொருக்குப் பேட்டை புகைவண்டி நிலையத்திற்கு அருகிலுள்ள கிருட்டிணசாமி பிள்ளை தோட்டத்தில், தோழர் எஸ். எஸ். பி. லிங்கம் தலைமையில், மலாயா சென்று கலைப் பணியாற்றி, தாயகம் திரும்பிய நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்களுக்கு சென்னை 5-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் ஓர் பாராட்டுக் கூட்டம் நடைபெறும்.

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

தபால் ஊழியரிடை பொதுச்செயலாளர்

அகில இந்திய தபால் தந்தி நிர்வாக அலுவலக ஊழியர் சங்கம் —பி. எம். ஜி —அலுவலகக் கிளை (சென்னை-2)யின் இரண்டாம் ஆண்டு விழாக் கூட்டம் 23-11-56 வெள்ளியன்று மாலை 5-10 மணி அளவில் நடைபெறும்.

திரு டி. புருஷோத்தம் எம்.எல் ஏ. அவர்கள் தலைமை தாங்குவார்; தோழர்கள் டி. வி. ஆனந்தம், கே. விநாயகம் எம்.எல்.ஏ., பி. கே. எஸ். சாரி (பி. எம் ஜி.), தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் பேசுவர்.

காட்டுக்கோட்டை தி. மு. கழகத் துவக்க விழா

24—11—56 மாலை 6 மணிக்கு, காட்டுக்கோட்டையில் (ஆத்தூர்—சேலம்), தோழர் பி. எம். ரெங்கசாமி தலைமையில், தி. மு. கழகத் துவக்க விழா நடைபெறும்; தோழர் சிற்றுளி-சுப்பிரமணியம் கொடியேற்றி வைப்பார்; தோழர் எம். பி. சுப்பிரமணியம் எம்.எல் ஏ. துவக்க விழாவாற்றுவார்: தோழர்கள் ஆனைமுத்து, எம். குப்புசாமி ஆகியோர் பேசுவர்.

அச்சம்பத்து வ. உ. சி. நினைவுப் படிப்பகப் பொதுக்கூட்டம்

23—11—56 மாலை 6 மணிக்கு, மதுரை மாவட்டம் அச்சம்பத்து வ. உ. சி. நினைவுப் படிப்பக (தி மு. க. கிளை) பொதுக்கூட்டம், சௌந்திரபாண்டியனார் திடலில், திரு என். சீனிவாசன் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் எஸ். முத்து, எஸ் எஸ். இராசேந்திரன், டி. வி. நாராயணசாமி ஆகியோர் பேசுவர்.

திருக்குறள் வகுப்பு

23—11—56 இரவு 7 மணிக்கு, சென்னை—இராயபுரம் இலக்கிய மன்றச் சார்பில், பனைமரத் தொட்டி, அட்டப்பாளையம் பசனைக் கோயிலில் திரு. அ. ஞானசுந்தரம், குறளில் 'மக்கட்பேறு' எனும் அதிகாரத்திற்குப் பொருள்கூறி விரிவுரையாற்றுவார்

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

23—11—56 இரவு 7 மணிக்கு, சென்னை 16-வது வட்டம் திருவள்ளுவர் முன்னேற்றக் கழகத்தில் தோழர் பி. ஜி சீனிவாசன் தலைமையில் 'மாணவர் கடமைகள்' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

23—11—56 மாலை 6-30 மணியளவில், சென்னை 8-வது வட்டம் திருவள்ளுவர் முத்தமிழ் கழகப் பணிமனையில் (10, லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை-1), திரு. கா. சேரலாதன் தலைமையில், 'தேர்தலும்—நம் கடமையும்' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

படைகளைத் திரும்பப் பெறுவதேன்?

பிரிட்டிஷ்—பிரெஞ்சு சர்க்கார்களை ஐ. நா. செயலாளர் கேட்கிறார்

சூயஸ் கால்வாய் சுத்தம் செய்வதுபற்றி எகிப்து கோரிக்கைக்கு இணக்கம்

நியூயார்க், நவ 21—

ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு மிதத் தீர்மானத்திற்கிணங்க ஏன் இன்னும் தங்களுடைய தரைப் படைகளை திரும்பப் பெற்றுக் கொள்ளவில்லை என்பதற்கான காரணம் கூறுமாறு பிரிட்டன், பிரான்ஸ், இஸ்ரேல் ஆகிய மூன்று நாடுகளையும், ஐ. நா. பொதுச்செயலாளர் ஹாமாஸ்க் ஜோயெல்ட் கேட்டிருக்கிறார்.

ஐ. நா. படை, செயல் திறம் படைத்திருக்க வேண்டுமாம்

"ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தை நிறைவேற்றும் கடமையுடன், செயல் திறம் படைத்ததாகவும் சர்வதேசப் படை அமைந்தானவுடன், படைகளைத் திரும்பப் பெறுவோம் என்று ஏற்கனவே உறுதி அளித்திருக்கிறோம்; அதன்படியே நடந்துகொள்வோம்" என்று பிரிட்டனின் அயல் நாட்டமைச்சர் செல்வின் லாயிட், நியூயார்க்கில் நிருபர்களிடை பேசுகையில் கூறியிருக்கிறார்.

புதியவர் போக்கு!

"சூயஸ் கால்வாயில், செயலாற்றும் திறமை கொண்ட ஐ நா. சர்வதேசப் படை அமைந்துவிட்டதா என்பதை ஐ நா. - வைக் கலந்தாலோசித்து முடிவு செய்ய வேண்டியவை பிரிட்டன், பிரெஞ்சு சர்க்கார்கள்தான்" என்று பிரிட்டிஷ் தற்காலிகப் பிரதமராக இருந்துவரும் பட்லர் என்பார் கூறியிருக்கிறார்.

பிரிட்டன் இணங்கும்?

போதுமான அளவுக்கு சர்வதேசப் படைகள் அமைப்பதுபற்றி எகிப்துப் பிரதமா நாசருடன் ஐ நா. பொதுச்செயலாளர் ஹாமர்ஸ்க் ஜோயெல்ட் ஒப்பந்தம் ஒன்று செய்துகொண்ட பின்னர், போர்ட் செய்திலிருந்து தனது துருப்புகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ள பிரிட்டன் இணங்கலாம் என்று கூறப்படுகிறது.

கூட்டுச் சதியா?

இஸ்ரேல் படைகள் உடனடியாகத் தங்கள் பழைய எல்லைக்குத் திரும்பிவிடவேண்டும் என்று 11 அரேபிய நாடுகள் கூட்டுக் கோரிக்கை ஒன்றை ஐ. நா-வில் தாக்கல் செய்திருக்கின்றன.

மேலும், பிரிட்டன், பிரான்ஸ், இஸ்ரேல் ஆகிய மூன்று நாடுகளும் கூட்டாகச் சேர்ந்து சதி செய்து சினாய் தீபகற்பத்தில் போரிட்டன என்று சிரியாவும், அப்பகுதிகளில் இருந்த அகதிகள் எல்லாம் படுமோசமாகத் துன்புறுத்தப்பட்டனர் என்று அரேபியாவும் புகார் செய்திருக்கின்றன.

அபாண்டமான பொய்!

"தன்னை எகிப்தும் ரஷ்யாவும் கூட்டாகச் சதி செய்து தாக்க இருப்பதாக இஸ்ரேல் கூறும் புகார் பொய்யானது—அபாண்டமானது; இந்தப் புகாரை ஐ. நா. சபை விசாரிக்கவேண்டும்" என்று நாசர் ஐ நா.-வினருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

கூட்டுச் சதி உண்மைதான்!

எகிப்து மீது இஸ்ரேல், பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய 3 நாடுகளும் கூட்டாகச் சதி செய்து போர் தொடுத்தன என்பது மெய்ப்பிக்கப்பட்டுவிட்டது என்று ஒரு அமெரிக்கப் பத்திரிகை கூறி அதற்கான விவரங்களையும் தந்துள்ளதாம்.

இஸ்ரேல் மறுக்கிறது

சினாய் தீபகற்பத்தில் பிரெஞ்சு விமானப் படைகள் நீக்குண்டுகள் வீசினதாகக் கூறப்பட்டதை இஸ்ரேல் அயல்நாட்டு இலாகா அதிகாரி ஒருவர் மறுக்கிறார்.

எகிப்துக்குப் பார்வையாளர்?

எகிப்தில் என்ன நடக்கிறது என்பது பற்றிக் கண்டறிய பாரபட்சம் இல்லாத பார்வையாளரை அனுப்புவதென்ற நேருவின் யோசனையை எகிப்து வரவேற்பதாகவும், அவர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுப்பதாக அறிவித்துள்ளதாகவும் தெரிகிறது

மராமத்து வேலை எப்போது?

போர்ட் செய்திலும், சூயஸ் கால்வாய் பிரதேசத்திலும் இருக்கின்ற எகிப்தியரல்லாத படைகள் அனைத்தும் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே, சூயஸ் கால்வாயிலுள்ள படைகள் நீக்கப்படவேண்டும் என்றும், இப்பிரச்சினையில் எகிப்தினுடைய கோரிக்கையை தாம் ஒப்புக்கொள்வதாகவும் ஐ நா. பொதுச் செயலாளர் கூறியிருக்கிறாராம்.

நார்வே துருப்புகள்!

220 நார்வே துருப்புக்களைக் கொண்ட ஐ' நா. சர்வதேசப் படையினர் பிரிவொன்று எகிப்து போர் நிறுத்தக் கோட்டைத் தாண்டி பிரிட்டிஷ் மண்டலத்தில் போர்ட் செய்திற்கு வந்திருப்பதாகவும், என்றாலும் ஐ. நா. படைகள் அங்கு வந்துவிட்டதினாலேயே அங்குள்ள பிரிட்டிஷ் படைகள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும் என அர்த்தமில்லை என்றும் பிரிட்டிஷ் தளபதி கூறியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த சர்வதேசப் படையில் மொத்தம் சுமார் 6,000 துருப்புகள் இருக்கலாமெனத் தெரிகிறது

பொறுப்பேற்றது!

எகிப்து வந்துசேர்ந்துள்ள ஐ. நா. போலீஸ்படை, எகிப்து—இஸ்ரேல் போர் நிறுத்தக்கோடு நெடுக தனது பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளதாக ஐ. நா. போலீஸ் படையின் தளபதியான ஜெனரல் இ எல். எம். பர்ன்ஸ் அறிவித்திருக்கிறாராம்.

ஆங்கிலோ - அமெரிக்க உறவில் நெருக்கடி

பிரிட்டிஷ் மந்திரி ஒப்பம்

நியூயார்க், நவ 21—

"மத்தியக் கிழக்குப் பிரச்சினையில் அமெரிக்காவிற்கும்-இங்கிலாந்திற்கும் கடுமையான கருத்து வேறுபாடு இருக்கிறது" என்று பிரிட்டிஷ் வெளிவிவகார மந்திரி செல்வின் லாயிட் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

'இந்த நிலைமையை மிகைப் படுத்துவதும் கூடாது; அதே போது குறைத்து மதிப்பிட்டு, நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளவும் கூடாது' என்றும் அவர் கூறினாராம்.

விமானப் போக்குவரத்து நிறுவன ஊழியர்கள்

800 பேர் ஒரு மணி நேர வேலை நிறுத்தம்

ஐதராபாத், நவ. 21—

இந்திய விமானப்படைக் கழக விமானங்களில் வேலை செய்யும் 250 ஊழியர்களை வேலையிலிருந்து நீக்கிவிடப் போவதாக 'நோட்டீஸ்' பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்றும், அந்த உத்தரவிற்கு எதிராக இந்திய விமானப் போக்குவரத்து நிறுவனத்தைச் சேர்ந்த 800 ஊழியர்கள் ஒரு மணி நேரம் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தனர் என்றும் தெரியவருகிறது.

கே. வி. கே. சாமி கொலை வழக்கு விசாரணை

தொடர்ந்து நடைபெற்ற கே.வி. கே. சாமி கொலை வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த சுப்பிரமணியம், கொலை நடந்த நாள் அன்று பெருமாளும், தங்கப்பழமும் 'இரயில்வே கேட்' பக்கம் இருப்பதையும், கொஞ்சம் தூரத்தில் சாமியும் நடராசனும் பேசிக் கொண்டு வருவதைத் தான் பார்த்ததாகவும், வெட்டும்போது சாமி 'அம்மா, வெட்டுகிறார்களே' என்று சத்தம் போட்டதாகவும், நடராசன் 'சாமியை வெட்டுகிறார்கள்,' என்று கூச்சலிட்டுக்கொண்டே ஓடியதாகவும், தங்கப்பழம் 'வெட்டு...... வெட்டு,' என்றதாகவும், பெருமாள் ஓடிவந்து இரண்டு வெட்டு வெட்டியதாகவும், தானும் சினிமா பார்க்காமலே வீட்டுக்குத் திரும்பியதாகவும் கூறினார்.

அடுத்து அப்ரூவர் வெங்கடாசலம் என்பவர் சாட்சியமளிக்கையில், தனக்குக் குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களைத் தெரியும் என்றும், தன்னை ஜெகந்நாதன் என்பவர் ஒரு மாதத்திற்கு முன்பே சாமியை கொலை செய்ய உதவ வேண்டும் என்று கேட்டதாகவும், தன்னை அவர் பெருமாள் வீட்டுக்கு அழைத்துச் சென்றதாகவும், அங்கு பெருமாள், சந்தியாகு, ஆத்தி, பொன்னுசாமி தேவர், தங்கப்பழம், பொன்னைய நாடார் இருந்ததாகவும், 'சாமி அராஜகம் செய்கிறான்; அவனை வெட்ட வேண்டும்' என்று எல்லோரும் கூறியதாகவும், எவ்வளவு பணம் வேண்டுமானாலும் பார்த்துக்கொள்ளலாம் என்று கூறப்பட்டதாகவும், சாமியை வெட்டிய செய்தியைப் பத்திரிகையில் பார்க்கவேண்டும் என்று கூறிவிட்டு பெருமாள் வெளியூர் சென்றதாகவும், சாமியைக் கொலை செய்ய அரிவாளுடன் ஆரோக்கியபுரம் வி வி டி பள்ளியருகில் காத்திருந்ததாகவும், பிறகு மாலை 'இரயில்வே கேட்' அருகில் இருந்ததாகவும், மறுநாள் பூராவும் எதிர்பார்த்ததாகவும், அதற்கு மறுநாள் காத்திருந்தும் பயனில்லை என்றும், அடுத்து மூன்று நாட்கள் கழித்து செவ்வாய்க்கிழமை எல்லோரும் சாமியைத் தேடியதாகவும் கூறினார்.

இவ்வழக்கில் மற்றொரு அப்ரூவரான சித்திரவேலு என்பவர் சாட்சியமளிக்கையில், சந்தியாகுவின் வீட்டில் பேசிக்கொண்டிருக்கையில், 'சாமி அட்டகாசம் செய்கிறார்; அவரைத் தொலைத்துவிட வேண்டும்' என்று சந்தியாகு கூறியதாகவும், 'நான் கே. வி. கே. சாமியை வெட்டச் சொல்லுவேன்; வெட்டவேண்டும்' என்று கூறியதாகவும் சொல்லிவிட்டு, பின்னர் சாமி வெட்டப்பட்ட விவரங்களையும் கூறினார்.

பின்னர் 6-வது சாட்சியாக விசாரிக்கப்பட்ட செல்வராஜ், பிராசிகியூஷனுக்கு எதிரியாக மாறி, திருவைகுண்டம் மாஜிஸ்திரேட்முன் அளித்த வாக்குமூலத்தை போலீசாரின் கொடுமையை தாங்கமுடியாது அளித்ததாகவும், இதை மாஜிஸ்திரேட்முன் எடுத்துக்கூறவில்லை என்றும், தனக்கு 5-வது எதிரியான பெருமாள் நாடார் உறவினர்தான் என்றும் கூறி, தான் அளித்த வாக்குமூலத்தை மறுத்தார்

மாயூரம் நகர தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம்

மாயூரம் நகர தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் 23-11-55 இரவு 8 மணிக்கு, மாயூரம் நடராசன் நினைவு வாசகசாலையில் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.